செ.வெ.எண்.17 நாள்: 09.04.2020

# அரியலூர் மாவட்டத்தில் விவசாய விலைப்பொருட்கள் எடுத்து செல்ல எந்தவித தடையும் இல்லை - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பிற்காக 144 ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ள நிலையில் பொதுமக்களுக்கு தேவைப்படும் அத்தியாவசிய காய்கறிகள் மற்றும் பழங்கள் போதுமான அளவு கிடைப்பதற்கு போர்கால அடிப்படையில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக காய்கறி மற்றும் பழப்பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் நலனுக்காக அரசு கீழ்கண்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அரியலூரில் 1301 ஹெக்டர் பரப்பில் பழங்களும் 3565 ஹெக்டர் பரப்பளவில் காய்கறிகளும் சாகுபடி செய்யப்படுகின்றன. தற்போது பெரும்பாலான காய்கறிகளும் பழங்களும் அறுவடைக்கு தயாராகி வருகிறது. ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ள இச்சூழ்நிலையில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்வதில் ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அல்லது துணை இயக்குநர் அலுவலகத்தையோ அணுகலாம்.

இதுதொடர்பாக விவசாயிகளுக்கு வேண்டிய வழிகாட்டுதலை வழங்குமாறு மேற்கண்ட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் காய்கறிகள் விற்பனையை எளிதாக்குவதற்கு தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் (TANHODA) மூலம் செயல்படும் நேரடி விற்பனை மையங்கள் மற்றும் கூட்டுப்பண்ணையத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் வாயிலாக நடமாடும் காய்கனி விற்பனை நிலையங்களை இயக்கவும் நுகர்வோருக்கு அவர்கள் அருகிலேயே நேரடியாக நியாயமான விலையில் வழங்குவதற்கும் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. விவசாயிகளுக்கு ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் தங்களது வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களை அணுகி வேண்டிய உதவிகளைப் பெறலாம். வட்டார வாரியான தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் மற்றும் தோட்டக்கலை அலுவலர்களின் தொலைபேசி எண்களான **அரியலூர்** வட்டாரத்திற்கு தோட்டக்கலை உதவி இயக்குநர் மற்றும் தோட்டக்கலை அலுவலருக்கு 9965880362 எண்ணிலும், **செந்துறை** வட்டாரத்திற்கு 9443905346 எண்ணிலும், **ஆண்டிமடம்** வட்டாரத்திற்கு 7502702758, 9444815340 எண்ணிலும், **ஜெயங்கொண்டம்** வட்டாரத்திற்கு 9944645189, 9047228068 எண்ணிலும், **தா.பழூர்** வட்டாரத்திற்கு 7502702758, 9943841155 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

மேலும், காய்கறி விலைப்பொருட்கள் எடுத்து செல்லும் வாகனங்களுக்கு எந்தவொரு தடைகளும் கிடையாது. ஏதேனும் தடைகள் ஏற்பட்டால் 1077 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு தங்களது தகவல்களை தெரிவிக்க வேண்டும். மேலும், பொருட்கள் ஏற்றும் வாகனத்தில் ஓட்டுநர் மற்றும் அவருடன் ஒரு நபர் மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுவார்கள். பொதுமக்கள் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள இந்நிலையில், அரியலூர் மாவட்டத்திலிருந்து இறப்பு, ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட திருமணம் மற்றும் அத்தியாவசிய பயணங்களுக்கு வெளியூர் செல்ல **https://ariyalur.nic.in** என்ற இணையதளத்தில் COVID-19 - click here to apply for vehicle movement pass (epass) என்ற Link-யினை பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் செய்யும்போது வாகனத்தின் வாகன பதிவு புத்தம் (R.C.Book), இன்சூரன்ஸ் நகல், ஓட்டுநரது உரிமம், பயணம் செய்பவர்களின் ஆதார் அட்டை நகல் மற்றும் பயண நோக்கத்திற்கான ஆவணங்கள் ஆகியவற்றினை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரது கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியினை தவறாது அளிக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அனுமதியினை (Vehicle EPASS) விண்ணப்பதாரர்கள் தங்களது மின்னஞ்சலில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

எனவே, தமிழ்நாடு அரசு மற்றும் தோட்டக்கலைத்துறை மேற்கொண்டுள்ள இத்தகைய வாய்ப்பினை அனைத்து காய்கறி மற்றும் பழங்கள் சாகுபடி செய்யும் வேளாண்பெருமக்கள் பயன்படுத்தி அரியலூர் மாவட்ட மக்களுக்கு காய்கறிகள் மற்றும் பழங்கள் எவ்வித தடையுமின்றி கிடைத்திட உதவிடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**